வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 01.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி ஒரு நாள் பயணமாக இன்று சத்தீஸ்கர் மாநிலத்திற்கு சென்று, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

மகப்பேறு மரணம் இல்லா மாநிலமாக புதுச்சேரி திகழ்வதாக புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், ஆன்லைன் மூலமாக, பிறப்பு-இறப்பு சான்றிதழ்களை 24 மணி நேரத்திற்குள் பெறும் திட்டம் இன்று தொடங்கப்பட்டது.

ஆந்திரபிரதேச மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவாமி கோவிலில் இன்று காலை ஏற்பட்ட விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

*பிரதமர் 1* (17)

சத்தீஸ்கர் மாநிலத்தின் உதய தினமான இன்று, பிரதமர் திரு நரேந்திர மோடி ஒரு நாள் பயணமாக அம் மாநிலத்திற்கு சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். மாநிலங்களின் மேம்பாட்டை அடிப்படையாக கொண்டு நம் நாட்டை வளர்ச்சியடைந்த தேசமாக

உருவாக்க அரசு முனைப்புடன் செயலாற்றுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். சத்தீஸ்கரின் நயா ராய்பூரில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவானி மருத்துவமனைக்கு சென்று, அங்குள்ள சுமார் 2 ஆயிரத்து 500 குழந்தைகளுடன் கலந்துரையாடினார். பிறவி இதய நோயால் பாதிக்கப்பட்ட அந்த குழந்தைகளுக்கு மருத்துவமனைக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், அங்கு, பிரஜபிதா பிரம்ம குமாரிகளின் சாந்தி ஷிகார் வளாகத்தையும் பிரதமர் திறந்து வைத்தார். தொடர்ந்து, சத்தீஸ்கர் சட்டமன்றத்தின் புதிய கட்டிடத்தையும் திறந்து வைத்தார். இந்த புதிய சட்டமன்ற வளாகத்தில் அமைந்துள்ள முன்னாள் பிரதமரும், பாரத ரத்னாவுமான அடல்பிகாரி வாஜ்பாயின் திரு உருவ சிலையையும் அவர் திறந்து வைத்தார். நயா ராய்பூரில் உள்ள ஷாஹீத் வீர் நாராயண் சிங் நினைவகம் மற்றும் பழங்குடி சுதந்திர போராட்ட வீரர்களின் அருங்காட்சியகத்தையும் திறந்து வைத்து பார்வையிட்டார்.

*பிரதமர் 2 (6)*

சத்தீஸ்கர் மாநிலம் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகளை குறிக்கும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வெள்ளி விழா கொண்டாட்டங்களிலும் அவர் பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில், சாலைகள், தொழில், சுகாதாரம், எரிசக்தி போன்ற துறைகளை சார்ந்த சுமார் 14

ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

*மாநிலங்கள் உத தினம் (13)*

கேரளா, கர்நாடகா, ஆந்திரா, சத்தீஸ்கர், அரியானா, மத்திய பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் மற்றும் லட்சத்தீவு, புதுச்சேரி யூனியன் பிரதேசங்களின் உதய தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் இந்த மாநிலங்கள் ஒவ்வொன்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்பை அளித்துள்ளதாக தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்த மாநிலங்களும், யூனியன் பிரதேங்களும் தொடர்ந்து புதிய மைல்கற்களை எட்ட வேண்டும் என்று தாம் வாழ்த்துவதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், இந்த மாநிலங்கள் வளர்ந்த இந்தியாவிற்கான உறுதியை நிறைவேற்றுவதில் திறமையான மற்றும் கடின உழைப்பாளி மக்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்கியுள்ளன என்று பாராட்டி உள்ளார்.

*புதுச்சேரி விடுதலை நாள் 1 (19)*

புதுச்சேரி விடுதலை நாள் இன்று கொண்டாடுவதை ஒட்டி, கடற்கரை சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டார். தேசிய கொடியை ஏற்றி வைத்த பின்னர் அவர் காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். சுமார் 300 ஆண்டுகளாக பிரெஞ்ச் ஆதிக்கத்தில் இருந்து வந்த புதுச்சேரிக்கு 1954 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் தேதி விடுதலை கிடைத்தது. இந்நாளை புதுச்சேரி விடுதலை நாளாக அரசு கொண்டாட வேண்டும் என புதுச்சேரி பிரெஞ்ச் இந்திய சுதந்திர போராட்ட தியாகிகள் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இதையடுத்து, நவம்பர் 1 ஆம் தேதியை புதுச்சேரி விடுதலை நாளாக அரசு சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர் திரு ரங்கசாமி, விடுதலை போராட்ட வீரர்களின் தியாகங்களை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில், காரைக்காலிலும் ஒரு நினைவிடம் அமைக்கப்படும் என்று கூறினார். மேலும், புதுச்சேரி கதிர்காமம் இந்திராகாந்தி அரசு மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 4 ஆவது தளத்தில் 20 கோடி ரூபாய் மதிப்பிலான 11 அதி நவீன அறுவை சிகிச்சை அரங்குகள் கட்டப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார். இம்மருத்துவமனை வளாகத்தில் மத்திய மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் 23.75 கோடி

*புதுச்சேரி விடுதலை நாள்* 2 (13)

ரூபாய் மதிப்பிலான தீவிர சிகிச்சை பிரிவு தொடங்கப்பட உள்ளதாகவும், குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைந்துள்ளதாகவும், மகப்பேறு மரணம் இல்லா மாநிலமாக புதுச்சேரி திகழ்வதாகவும் திரு ரங்கசாமி தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்..........

(வாய்ஸ்- சிளம்)

இவ்விழாவில், சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், சட்டப்பேரவை துணை தலைவர் திரு ராஜவேலு, மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயலர், அரசு உயரதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதேபோல், புதுச்சேரி விடுதலை நாள் காரைக்கால், மாகே, ஏனாம் பகுதிகளிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காரைக்காலில் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பி.ஆர்.என் திருமுருகன் தேசிய கொடியை ஏற்றி, காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

*புதுச்சேரி விடுதலை நாள்* 3 (6)

மாகே-வில் வேளாண் துறை அமைச்சர் திரு தேனீ ஜெயக்குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

இதேபோல் ஏனாமில் மண்டல நிர்வாக அதிகாரி திரு அன்கீத் குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்து காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

ஜிஎஸ்டி 1 (18)

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த செப்டம்பர் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சீர்திருத்தம் நாடு முழுவதிலும் உள்ள மக்களுக்கு பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தி உள்ளது. ஜிஎஸ்டி சீர்திருத்தம் தமிழ்நாட்டின் கைவினை கலைஞர்கள், தொழில்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு குறிப்பிடத் தக்க ஊக்கத்தை அளித்துள்ளன. ஜவுளித் துறையில் புகழ் பெற்ற திருப்பூர் பின்னலாடை, காஞ்சிபுரம் பட்டு மற்றும் பிற புவிசார் குறியீடு கொண்ட கைத்தறி பொருட்களுக்கு விதிக்கப்படும் வரி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

சுவாமி மலை வெண்கல சின்னங்கள், பித்தளை, கல் மற்றும் மர கைவினை பொருட்கள், பிரபலமான காஞ்சிபுரம் புடவைகள்

ஆகியவற்றின் மீதான ஜிஎஸ்டி வரி, 12 சதவிகிதத்தில் இருந்து, 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டதால், மாநிலம் பல்வேறு துறைகளில் வளர்ச்சி அடைந்துள்ளது. மீன் மற்றும் கடல் உணவுகள் மீதான வரி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் மீனவ மக்களுக்கு உத்வேகம் அளித்துள்ளது. மேலும், தென்னை, நார் தொழில் அலகுகள், தென்னை நார் பாய்கள், கயிறுகள் ஆகியவற்றின் வரி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டதால் சிறு வணிகர்கள் பெரும் பயனடைந்துள்ளனர்.

*ஜிஎஸ்டி 2 (3)*

இந்த அடுத்த தலைமுறை வரி சீர்திருத்தங்கள் கிராமபுற வாழ்வாதாரங்களை வலுப்படுத்தி உள்ளன. மேலும், தமிழ்நாட்டை தொழில்துறை மையமாக மாற்றி உள்ளது என்பதில் ஐயமில்லை.

*புதுச்சேரி – பிறப்பு சான்றிதழ் (12)*

புதுச்சேரியை சேர்ந்தவர்கள் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை பெறுவதற்காக நகராட்சி அலுவலகத்தில் காத்திருக்கும் சூழ்நிலை இருந்து வந்தது. இந்நிலையில், பிறப்பு-இறப்பு சான்றிதழ்கள் ஆன்லைன் மூலமாக 24 மணி நேரத்திற்குள் பெறும் திட்டத்தின் தொடக்க விழா இன்று காலை குளுனி மருத்துவமனையில் நடைபெற்றது. உள்ளாட்சித் துறை இயக்குநர்

திரு சக்திவேல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, குழந்தைகளின் பெற்றோரிடம் பிறப்பு சான்றிதழ்களை வழங்கினார். இதுகுறித்து அவர் கூறுகையில்........

(வாய்ஸ் - சக்திவேல்)

இந் நிகழ்ச்சியில் துணை இயக்குநர் திரு சவுந்தரராஜன், புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு கந்தசாமி, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணைய துணை இயக்குநர்கள் திரு சந்திப்ராய், திரு ஷர்னித் மத், புதுச்சேரி மக்கள் தொகை கணக்கெடுப்பு துணை இயக்குநர் ஜெயபாரதி, உதவி இயக்குநர் திரு சக்திவேல் குமரன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*ஆந்திரா-விபத்து* 1(17)

ஆந்திரபிரதேச மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள காஷிபுக்காவில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா சுவாமி கோவிலில் இன்று காலை ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். ஏகாதசி தரிசனத்திற்கு சென்ற ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆந்திரபிரதேச முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு இந்த

விபத்து குறித்து தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார். கோவிலுக்கு சென்ற பக்தர்கள் உயிரிழந்தது மிகவும் வேதனை அளிப்பதாக அவர் கூறியுள்ளார். காயமடைந்தவர்களுக்கு முறையான மற்றும் விரைவான மருத்துவ சேவைகளை உறுதி செய்ய அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். மேலும் உள்ளூர் அதிகாரிகள் மற்றும் பொது பிரதிநிதிகள் சம்பவ இடத்தை பார்வையிட்டு நிவாரண நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அறிவுறுத்தி உள்ளார்.

வெங்கடேஸ்வரா கோவிலில் ஏற்பட்ட விபத்து குறித்து குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது ஆறுதலை தெரிவித்துக்

*ஆந்திரா-விபத்து* 1(7)

கொள்வதாகவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் இறைவனை வேண்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி வேதனை தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் இழப்பீடும் வழங்குவதாக பிரதமர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*பீகார்* (12)

பீகாரின் பெரும்பாலான பகுதிகளில் மழை மற்றும் பலத்த காற்று காரணமாக சட்டமன்ற தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று கடுமையாக பாதிக்கப்பட்டது. மோசமான வானிலை காரணமாக ஹெலிகாப்டர்கள் புறப்பட முடியாததால் நட்சத்திர பேச்சாளர்கள் பல இடங்களில் தேர்தல் பேரணிகளை மேற்கொள்ளவில்லை. அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், ஜன் சூரஜ் கட்சி தலைவர் திரு பிரசாந்த் கிஷோர் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் சாலை பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். கோபால் கஞ்சில் நடைபெற் இருந்த மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷாவின் தேர்தல் பேரணி ரத்து செய்யப்பட்டது. இதனிடையே, மகாகத்பந்தன் வேட்பாளர்களை ஆதரித்து காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி, பெகுசராய் தேர்தல் பேரணியில் உரையாற்றினார்.

கிரிக்கெட் (4)

ஐசிசி உலக கோப்பை மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நாளை நவி மும்பையில் உள்ள டாக்டர் டி.ஒய். பாட்டீல் ஸ்போர்ட்ஸ் அகடமியில் நடைபெறுகிறது. பிற்பகல் 3 மணிக்கு தொடங்கும் இப்போட்டியில் இந்தியாவும், தென்னாப்பிரிக்காவும் களம் காண்கின்றன.